**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.19/2019**

2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் நாள் பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ) அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 28.02.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | புஷ்பநாதன் | ஜாதி : | |
| த /பெயர் : | பாலசுப்ரமணியம் | மதம் : | |
| கிராமம் : | | தொழில் : | |
| வட்டம் : | | வயது : | |

பி.சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணைதொடர்ச்சி

**1) நான் எந்த புல எண்ணிற்காக கட்சியாடி வருகிறேன்எ ன்றால் புல எண்.201/1டி ஆகும். என் அப்பா வாதியின் தந்தையாருக்கு கிரையம் செய்து கொடுத்த எனக்கு ஆட்சேபணை இருக்கிறதா? என்றால் இருக்கிறது. புல எண்.201/1டி5 சம்மந்தமாக என்னால் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.7 மின் கட்டண ரசீது எந்த புல எண்ணிற்காக செலுத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை.**

**2) பி.சா.ஆ.6 வீட்டு ரசீதுகள் ஆவணத்திலும் எந்த புல எண்ணிற்காக வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதா? என்றால் இல்லை. எனது தந்தையாருக்கு 1974 வருடம் புல எண்.201/1டி சொத்தை தவிர வேறு எந்த பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.**

**3) என் தந்தையாருக்கு புல எண்.201/1டி தவிர வேறு எந்த சொத்துக்களும் உள்ளதா என்றால் இல்லை. எந்த தந்தையார் 1974 ஆம் வருடம் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணத்தில் சொல்லியுள்ள புல எண்ணை**

குறித்த சொத்துக்களை நான் கொடுத்துவிடுகிறேன் அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. மற்ற சொத்துக்களை நான் கொடுக்கமாட்டேன். என் அப்பா 44 சென்ட் வாங்கியுள்ளார். அதில் 25 சென்டை வாதியின் தந்தையாருக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டார். மீதமுள்ள இடத்தை நான் கொடுக்கமாட்டேன் என கட்சியாடி வருகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். அவர்களுக்கு எனது தந்தையாரால் கிரையம் செய்துக்கொடுக்கப்பட்ட 25 சென்ட் இடத்தை கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.